# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் யூ (ஊபீயு:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 08.03.2019

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறையின் சார்பாக சர்வதேச மகளிர் தினம் 08.03.2019 அன்று பல்கலைக்கழக L.CT.L. பழனியப்பச் செட்டியார் நினைவு அரங்கில் கொண்டாடப்பட்டது.




அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறைத்தலைவர் பேரா.கா.மணிமேகலை தனது வரவேற்புரையில், உலக மகளிர் தினமானது பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு சிறந்த நிகழ்வாகும் என்றார். வருடத்தில் 365 நாட்களும் பெண்கள் உழைத்துக் கொண்டேதான் இருக்கின்றனர் என்றும், அவர்கள் தங்கள் திறமையை உணர்ந்து தங்களுக்கான வாய்ப்பைத் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கல்வியின் மூலமே பெண்கள் தங்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.நா.ராஜேந்திரன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது தலைமை உரையில் இச்சமூகம் ஒரு ஆணை அதிகாரத்தின் மையப்பகுதியிலும், பெண்ணை விளிம்பு நிலையிலும் வைத்து கட்டமைக்கப்பட்டுள்ளது. இது பெண்களுக்கான ஓட்டுரிமையிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. பெரும்பான்மையான உலகப் பகுதியை ஆண்ட இங்கிலாந்தில் 1918-க்கு பிறகே பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. மேலும் மிகவும் முன்னேற்றமடைந்ததாக சொல்லப்பட்ட பிரான்ஸ் நாட்டில் 1948-ல் அதாவது இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு தான் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. சீனா போன்ற நாடுகளில் குழந்தை பருவத்திலேயே பெண்குழந்தைகளின் பாதங்களை மடக்கி சரியாக வளரவிடாமல் அவர்களின் உரிமை மறுக்கப்பட்டது. இவையாவும் வரலாறு சொல்லும் உண்மை. ஆணும்,

பெண்ணும் சமம் என்ற உரிமையை 1948-ல் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டமே முதலில் உணர்த்தியது. ஆகவே பெண்கள் தங்கள் முழு உரிமையையும், அதே நேரத்தில் கடமைகளையும் உணர்ந்து செயலாற்றினால் வாழ்க்கையில் வெற்றியடையலாம் என்றார்.




சென்னை, அப்துல்கலாம் விஷன் இந்தியா கட்சியின் நிறுவனர் திரு.வெ.பொன்ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தனது சிறப்புரையில் பெண்கள் பல்வேறு விதமான சதிவலைகளில் சிக்க வைக்கப்பட்டு, இழிவான நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும், "இவ்வுலகம் இரவும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கிறது. அது ஒவ்வொரு பெண்ணையும், ஆணையும் உயர்த்துவதற்கு என்பதை நாம் உணரவேண்டும். பகலிலும் கனவு காணுங்கள் அப்போதுதான் அது பலிக்கும். பொதுவாகப் பெண்கள் கனவுகளையும், லட்சியங்களையும் முன்னெடுத்தால்தான் சாதனைகளை படைக்க முடியும்" என்ற டாக்டர்.அப்துல்கலாம் அவர்களின் கூற்றை நினைவு கூர்ந்தார். உலகத் தரவரிசையில் கல்வி, பொருளாதாரம் மற்றும் உடல்நலம் ஆகியவற்றில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் பெண்கள் எந்தவிதமான தடைகளுமின்றி முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்றும், மதிக்கப்படுகின்றனர் என்றும் கூறினார். பெண்கள் தன்னம்பிக்கையுடன் விடாமுயற்சியை கடைபிடித்தால் வெற்றி பெறமுடியும் என்றும் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் பாகை. கண்ணதாசன், "இலக்கியத்தில் பெண்கள்" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். உலக மகளிர் தினம் குறித்து விரிவாக எடுத்துரைத்ததோடு, சங்க இலக்கியத்தில் தாய்மை முன்னிறுத்தப்பட்டது என்றும், ஒரு இல்லத்தின் தூணாகவும், குடும்ப உறவுகளை பாதுகாக்கும் அரணாகவும் பெண்கள் பாராட்டப்பட்டனர் எனத் தெரிவித்தார். ஆனால் பக்தி இலக்கிய காலங்களில் பெண் படிப்படியாக அடிமையாக்கப்பட்டு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர் என்றும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் புரட்சிக்கவி பாரதி தெளிவான பெண்ணிய சிந்தனைகளையும், பெண்ணுரிமைக்கு பாடுபட்ட மற்றும் சாதனைப் பெண்களையும் முன்னிலைப்படுத்தினார். பெண்களை பொன்னாகப் பார்க்கும் நாடு நமது இந்தியா. ஆகவே பெண்கள் தங்களது தடைகளை உடைத்தெறிந்து முன்னேற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழக பெண் பணியாளர்கள் மற்றும் மாணவிகளுக்கு பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற பெண்களுக்கு இந்நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியின் நிறைவாக உதவி பேராசிரியை முனைவர் ப.வீரமணி நன்றி கூறினார். பல்கலைக்கழக பேராசிரியர்கள், பெண் அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பெருமளவில் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்.